*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை*

*24 11 2025* **MONDAY** *6.30* **PM**

*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1) குமரிக்கடல் பகுதியில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*2) பாமனி விரைவு ரயில், பண்ருட்டியில் நின்று செல்லும் என்ற அறிவிப்பு, அப்பகுதி மக்களுக்கு மிகுந்த பலனளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*3) தமிழகத்தில் இதுவரை 6 கோடியே 16 லட்சம் வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.*

*4) தென்காசி மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.*

*5) உலக மகளிர் கபடி கோப்பையை இந்தியா வென்றுள்ளது.*

**>>>>><<<<<**

*குமரிக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி. அமுதா கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - அமுதா (1) 87 செகண்ட்ஸ்)*

*திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை நீடிக்கக்கூடும் என்றும் திருமதி அமுதா கூறினார்.*

*(சவுண்ட் பைட் – அமுதா (2) 38 செகண்ட்ஸ்)*

*இதற்கிடையே, தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – லெட்சுமணன் 48 செகண்ட்ஸ்)*

**>>>>><<<<<**

*திருப்பதி - மன்னார்குடி இடையேயான பாமணி விரைவு ரயில் பண்ருட்டி ரயில் நிலையத்தில் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமது கோரிக்கையை ஏற்று, அதற்கான அறிவிப்பினை வெளியிட்ட பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சருக்கும் தமிழக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், இந்த அறிவிப்பின் மூலம் பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலனடைவார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.*

**>>>>><<<<<**

*தென்காசி மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.*

*திருமங்கலம் – கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில், இடைக்கால் கிராமம் அருகே இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – செந்தில் 29 செகண்ட்ஸ்)*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.*

**>>>>><<<<<**

*நெல் கொள்முதல் பிரச்சினையில், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதற்கு திமுக அரசின் அலட்சியமே காரணம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*சேலம் விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15 நாட்கள் நெல்கொள்முதல் நடைபெறாமல் இருந்ததாக தெரிவித்தார்.*

*குறுவை சாகுபடி விவசாயிகளை பயிர் காப்பீட்டு திட்டத்தில் இணைக்க திமுக அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.*

**>>>>><<<<<**

*பிரபல திரைப்பட நடிகர் தர்மேந்திரா இன்று மும்பையில் காலமானார். அவருக்கு வயது 89.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் பலர் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

**>>>>><<<<<**

*தமிழகத்தில் ஆறு கோடியே 16 லட்சம் வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர்இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - அச்சனா 63 செகண்ட்ஸ்)*

**>>>>><<<<<**

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*திண்டுக்கல் மாவட்டத்தில் 3 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவையை, மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி இன்று தொடங்கி வைத்தார்.*

**>>>>><<<<<**

*மதுரை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை முழுமையாக நிறைவேற்றிய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு ஆட்சியர் திரு.பிரவீன் குமார் இன்று பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.*

**>>>>><<<<<**

*ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. சந்திரகலா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

**>>>>><<<<<**

*திருச்சி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக துறையூர் அருகேயுள்ள புளியஞ்சோலை சுற்றுலா தலத்தில், சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.*

**>>>>><<<<<**

*கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் பெரியார் நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.*

**>>>>><<<<<**

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*உலக மகளிர் கபடி கோப்பையை இந்தியா வென்றுள்ளது.*

*டாக்காவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா 35-28 என்ற புள்ளிக்கணக்கில் சீன தைபேயை வென்றது.*

**>>>>><<<<<**

*Deaflympics போட்டியில் இந்தியாவின் Loma Swain வெண்கலப்பதக்கம் வென்றார்.*
*ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் கராத்தே பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

**>>>>><<<<<**

*உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*
*ருமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா – பிரான்ஸை வென்றது.*

**>>>>><<<<<**

*மாற்றுத்திறனாளிகளுக்கான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 35 தங்கம் உட்பட 118 பதக்கங்களை வென்றது.*
*தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில், தடகள பிரிவில் மட்டும் 34 தங்கம், 51 வெள்ளி, 31 வெண்கலப்பதக்கங்களை இந்தியா வென்றது.*
*துப்பாக்கிச் சுடும் பிரிவில் ஒரு தங்கம், ஒரு வெண்க்கலப்பதக்கம் இந்தியாவிற்கு கிடைத்தது.*
*இப்போட்டியின் பதக்கப்பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.*

**>>>>><<<<<**

*உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி சிலி சென்றடைந்தது.*

*இப்போட்டி, அடுத்த மாதம் 1ஆம் தேதி தொடங்கி, 13ஆம் தேதிவரை சாண்டியாகோவில் நடைபெறவுள்ளது.*

**>>>>>END<<<<<<**